# 7. விட்டுச் செல்லாதே

**பாடம் : தமிழ்**

**வகுப்பு : II**

## அ. கடினச்சொற்கள்

1. கரிக்கோல்
2. அழிப்பான்
3. துருவி
4. பிடிக்கும்
5. நாளை
6. மாலை
7. இங்கே
8. எங்கே

## ஆ. பொருள் அறிக

1. பிழை - தவறு
2. எண்ணி - நினைத்து
3. அடுத்த நாள் - மறுநாள்
4. கூராக - கூர்மையாக

AAMS KOSAVAPATTY

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### அ. பொருத்தமான குறியிடுக - சரி (அ) தவறு

1. பாத்திமா அழிப்பானை வீட்டில் மறந்து வைத்துவிட்டாள் - (X)

2. கயல் தனது துருவியை மறந்து பள்ளியில் விட்டுச்சென்றாள் - (X)

3. முத்துவிற்குக் கரிக்கோல் கூராக இருந்தால் பிடிக்காது - (X)

4. பாத்திமா, முத்து, கயல் மூவரும் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள் - (√)

5. பொம்மை போட்ட அழிப்பான் பாத்திமாவினுடையது - (√)

### ஆ. சொன்னது யார்? பொருத்துக?

1, கயல் என்னை எடுக்காமல் சென்றுவிட்டாள் - கரிக்கோல்

2. எழுதும்போது பிழையானால் என்னைத் தேடுவாளே - அழிப்பான்

3. இங்கேயும் இல்லையே - பாத்திமா

4. இங்கேதானே வைத்தேன் - கயல்

5. எங்கே போனது? - முத்து

### இ. வாய் மொழியாக விடை தருக.

**1. கரிக்கோல், துருவி, அழிப்பான் இவை மூன்றும் என்னென்ன நினைத்து வருத்தப்பட்டன?.**

AAMSKOSAVAPATTY

- கயல் இன்று கரிக்கோல் இல்லாமல் என்ன செய்வாளோ!
- முத்து துருவி இல்லாமல் இன்று எப்படி எழுதுவானோ!
- பாத்திமா எழுதும் போது பிழையானால் அழிப்பான் இல்லாமல் என்ன செய்வாளோ! என நினைத்து மூன்றும் வருத்தப்பட்டன.

## ஈ. வினா விடை எழுதுக

**1. வகுப்பில் யார் யார் என்னென்ன பொருள்களை விட்டுச் சென்றனர்?**

| | | |
|---|---|---|
| கயல் | - | கரிக்கோல் |
| பாத்திமா | - | அழிப்பான் |
| முத்து | - | துருவி |

போன்ற பொருள்களை வகுப்பில் விட்டுச் சென்றனர்.

**2. விட்டுச் சென்ற பொருள்கள் உரியவர்களுக்குக் கிடைத்தனவா? எப்போது?**

விட்டுச் சென்ற பொருள்கள் உரியவர்களுக்கு அடுத்தநாள் கிடைத்தன.

## உ. பொருத்தமான சொல்லை எழுதி நிரப்புக

(அது, அவன், அவள், அவை, அவர்கள்)

1. மதி ஒளி இரண்டாம் வகுப்பு படிக்கிறாள்.

AAMS KOSAVAPATTY

**அவள்** அழகாக ஓவியம் வரைகிறாள்.

2. வளவன் மிதிவண்டி ஓட்டுகிறான்.

   **அவன்** கடைக்குச் செல்கிறான்.

3. பயணிகள் பேருந்தில் ஏறுகின்றனர்.

   **அவர்கள்** சுற்றுலா செல்கின்றனர்.

4. பூனை பால் குடிக்கிறது.

   **அது** _எலியைப் பிடிக்கும்.

5. கதைப் புத்தகங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

   **அவை** அத்தை வாங்கித் தந்தவை.

AAMS KOSAVAPATTY